# ஏழை விவசாயிடம் லஞ்சம் கேட்ட மண் பரிசோதனை உதவி பேராசிரியர் லஞ்ச ஒழிப்புத்துறையினரால் கைது.

*****

புகார்தாரர் ஒரு விவசாயி, அவர் விவசாயம் செய்துவரும் இடத்திற்கு சவுடு மண் தேவைப்பட்ட காரணத்தினால் கடந்த 04.07.2022ந் தேதி ஆண்டிப்பட்டியில் உள்ள வேளாண்மை அதிகாரிக்கு சவுடு மண் வேண்டி விண்ணப்பம் செய்தததாகவும், இதன் தொடர்பாக 02.08.2022 அன்று வேளாண் உதவி இயக்குநர், ஆண்டிப்பட்டி அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் வேறொரு பட்டா இடத்தில் மண் எடுப்பதற்கு அனுமதி இல்லை என்றும் அருகிலிலுள்ள குளத்திலிருந்து மண் எடுப்பதற்கு பரிந்துரை செய்வதாக கூறி கடிதம் கொடுத்துள்ளார், இக்கடிதத்தினை தேனி மாவட்டம் மைன்ஸ் அலுவலகம் சென்று விசாரணை செய்தபோது திண்டுக்கல் மாவட்டம் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு யுனிவர்சிட்டி பொறியியல் கல்லூரியில் மண் பரிசோதனை சான்று வாங்கி வரவேண்டும் என்று கூறியுள்ளனர். பின்னர் புகார்தாரர் தனது கிராமத்திற்குட்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் இந்த விவரங்களை கூறி ஏ பதிவேடு எஃப்எம்பி ஸ்கெச் அடங்கல் ஆகிய ஆவணங்களை எடுத்துக் கொண்டும் சவுடு மண் எடுக்கப்போகிற கருங்குளத்திலிருந்து மண் எடுத்து தெரிந்தவர் மூலமாக அண்ணா பல்கலைக்கழக உறுப்பு யுனிவர்சிட்டி பொறியியல் கல்லூரியில் மண் பரிசோதனை உதவி பேராசிரியர் திரு.ரமேஷ் பாண்டியன் என்பவரை ஆகஸ்ட் முதல் வார கடைசியில் அவருடைய கைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கேட்ட போது மண் பரிசோதனை செய்வதற்கு ரூ.20 ஆயிரம் செலவாகும் எனவும் 20 ஆயிரம் பணமும் பரிசோதனை மண்ணையும் கொண்டு வந்தால் பரிசோதித்து அறிக்கை தருவோம் என்று கூறி அனுப்பி விட்டார். பின்னர் கடந்த 24.09.2022ந் தேதி மீண்டும் திரு.ரமேஷ் பாண்டியன் அவர்களை தொடர்பு கொண்டு தான் எப்போது மண் பரிசோதனை செய்ய வர வேண்டும் என கேட்டபோது, வருகின்ற திங்கட்கிழமை 26.09.2022ந் தேதி காலை ரூ.20 ஆயிரம் பணம் மற்றும் பரிசோதனைக்குரிய மண் எடுத்து வர கூறியுள்ளார். புகார்தாரர் 26.09.2022ந் தேதி காலை பரிசோதனைக்குரிய மண்ணை எடுத்துக் கொண்டு திரு.ரமேஷ்

பாண்டியன் அவர்களை சந்தித்தபோது அவர் ஒரு விண்ணப்பம் எழுதி தர சொல்லியுள்ளார், பின் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டுள்ளார், உடனே புகார்தாரர் நான் கொடுக்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பீர்களா என கேட்க, உடனே திரு.ரமேஷ் பாண்டியன் ரசீதெல்லாம் கொடுக்க முடியாது, பொதுவாக மண் பரிசோதனைக்கு ரூ.30 ஆயிரம் லஞ்சமாக வாங்குவோம், ஆனால் நீங்கள் விவசாயம் செய்வதற்கு என்று சொன்னதால் ரூ.20 ஆயிரம் லஞ்சமாக கேட்பதாக கூறியுள்ளார். உடனே புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என கெஞ்சியுள்ளார், உடனே ரமேஷ் பாண்டியன், வேண்டுமானால் ரூ.5 ஆயிரம் குறைத்துக் கொண்டு ரூ.15 ஆயிரம் கொண்டு வர வேண்டும் என கூறியதால் மனமுடைந்து வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்துள்ளார். நாமோ விவசாயம் தான் செய்கிறேனாம் விவசாயம் செய்ய மண் பரிசோதனை செய்துதர லஞ்சம் ஏன் கொடுக்க வேண்டும் என்று மனதில் உறுதியுடன் திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறையிடம் 27.09.2022ந் தேதி ஒரு புகார் மனுவை சமர்பித்தார். இப் புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்து வழக்கின் எதிரியான திரு.ரமேஷ் பாண்டியனை தேடிச் சென்றபோது அவர் விடுப்பில் உள்ளதாகவும் நாளை அலுவலகத்திற்கு வருவார் எனவும் தெரிவித்தனர். இன்று 28.09.2022ந் தேதி புகார்தாரர் மேற்படி எதிரி திரு.ரமேஷ் பாண்டியன் அவர்களை சென்று சந்தித்து மண் பரிசோதனை சான்று கேட்டபோது, எதிரி திரு.ரமேஷ் பாண்டியன் புகார்தாரரிடம் மண் பரிசோதனை சான்று கொடுத்து நான் கேட்ட பணத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டு புகார்தாரரிடமிருந்து ரசாயனம் தடவிய லஞ்ச பணமான ரூ.15 ஆயிரத்தை வாங்கியுள்ளார், அப்போது மறைந்திருந்த திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஆளிநர்கள் எதிரி உதவி பேராசிரியர் திரு.ரமேஷ் பாண்டியன், அவர்களை கைது செய்தனர்.